



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (30.11.2024) சென்னை அண்ணா அறிவாலயத்தில், "ஃபெஞ்சல் புயல் காரணமாக சென்னை மற்றும் பல்வேறு மாவட்டங்களில் கனமழை பெய்து வருவதையொட்டி கழகத்தின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு அறையில் (War Room ), பொதுமக்களிடம் இருந்து பெறப்படும் குறைகள் உடனுக்குடன் சரிசெய்யப்படுகிறதா என்று அவர்களிடம் தொலைபேசி வாயிலாகக் கேட்டறிந்தார். இந்தஆய்வின்போது, நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், நாடாளுமன்ற உறுப்பினர் என்.ஆர்.இளங்கோ, கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை ஆகியோர் உடனிருந்தனர்.







துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (30.11.2024) சென்னை பெருநகர மாநகராட்சி வளாகத்தில் செயல்பட்டு வரும் ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்தில் ஃபெஞ்சல் புயலினை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது, இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாநிதி மாறன், டாக்டர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.சுதர்சனம், ஆர்.டி,சேகர், இ.பரந்தாமன், கே.பி.சங்கர், துனை மேயர் மு.மகேஷ் குமார், ஆணையாளர் ஜெ குமரகுருபரன், சிறப்புத் திட்ட செயலாக்கத் துறைச் செயலாளர் மருத்துவர் தாரேஸ் அகமதுமற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (30.11.2024) ஃபெஞ்சல் புயலினை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பேசின் பாலம் அருகில் ஓட்டேரி நல்லா கால்வாயானது, பக்கிங்ஹாம் கால்வாயில் சேரும் இடத்தினைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது, இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாநிதி மாறன், கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ் சுதர்சனம், ஆர்.டி.சேகர், இ.பரந்தாமன், கே.பி.சங்கர், துணை மேயர் மு.மகேஷ் குமார், ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், சிறப்புத் திட்ட செயலாக்கத் துறைச் செயலாளர் மருத்துவர். தாரேஸ் அகமது மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடன் இருந்தார்கள்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (30.11.2024) ஃ பெஞ்சல் புயலினால் மழை பெய்து வரும் நிலையிலும், பெருநகர சென்னை மாநகராட்சிகுட்பட்ட வால்டாக்ஸ் சாலை, கல்யாணபுரம் பகுதியில் உள்ள பக்கிங்ஹாம் கால்வாயில் மழைநீர் தங்குதடையின்றி செல்வதைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது, இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாநிதி மாறன், டாக்டர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ் சுதர்சனம், ஆர்.டி.சேகர், இ.பரந்தாமன், கே. பி.சங்கர், துணை மேயர் மு.மகேஷ் குமார், ஆணையாளர் ஜெ குமரகுருபரன், சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை செயலாளர் மருத்துவர். தாரேஸ் அகமது மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### சென்னை – அண்ணா அறிவாலயத்தில் – கழகத்தின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள

# கட்டுப்பாட்டு அறைக்கு (War Room) - முதல்வர் மு.க.ஸ்டாலின் நேரில் சென்று ஆய்வு!

## கனமழையால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு கழகத்தின் சார்பில் செய்து தரப்படும் உதவிகள் குறித்து கேட்டறிந்தார்!

**சென்னை, டிச.2–**

**கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (30.11.2024) சென்னை, அண்ணா அறிவாலயத்தில் கழகத்தின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு அறைக்கு (War Room) நேரில் சென்று ஃபெஞ்சல் புயல் காரணமாக சென்னை மற்றும் அதனைச் சுற்றியுள்ள மாவட்டங்களில் கனமழை பெய்து வருவ தால், கனமழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கழகத்தின் சார்பில் செய்து தரப்பட்டுள்ள உதவிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.**

அதன் விவரம் வருமாறு:-

கனமழை, புயல் போன்ற இயற்கைப் பேரிடர்களின்போது கழகத்தின் சார்பில் மக்களிடமிருந்து புகார்கள் பெற்றிடவும், அதற்கு கழக நிர்வாகிகளின் மூலம் தேவையான உதவிகள் செய்திடவும் சென்னை, அண்ணா அறிவாலயத்தில் கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட்டது.

இந்த கட்டுபாட்டு அறையின் 08069446900 என்ற அவசர உதவி எண்ணிற்கு கனமழையால் பாதிக்கப்படும் மக்கள் அழைத்து தங்கள் குறைகளைத் தெரிவித்தவுடன், சம்பந்தப்பட்ட பகுதியிலுள்ள மாவட்டச் செயலாளர்கள், ஒன்றியச் செயலாளர்கள், கழக பகுதிச் செயலாளர்கள் போன்ற கழக நிர்வாகிகளுக்கு இதுதொடர்பான தகவல் தெரிவிக்கப்படும்.

உடன் கழக நிர்வாகிகள் பாதிக்கப்பட்ட மக்களைத் தொடர்பு கொண்டு அவர்களுக்குத் தேவையான உதவிகளை அரசு அலுவலர்கள் மற்றும் மாவட்ட நிர்வாகத்தினரைத் தொடர்பு கொண்டு செய்து தருவர். பின்னர் கட்டுப்பாட்டு அறைக்கு அழைத்து புகார் தெரிவித்த நபருக்கு தேவையான உதவிகள் செய்து தரப்பட்டுள்ள விவரங்கள் குறித்துத் தெரிவிப்பார்கள்.

கழகத் தலைவர் - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்றைய தினம் கட்டுப்பாட்டு அறைக்கு நேரில் சென்று ஆய்வு செய்த பின்னர், கட்டுப்பாட்டு அறைக்கு மாதவரத்திலிருந்து மழைநீர் தேங்கியுள்ளது குறித்து புகார் தெரிவித்த நபருடன் தொலைபேசி வாயிலாக முதலமைச்சர் அவர்கள் தொடர்பு கொண்டு, "புகார் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு, தீர்வு காணப்பட்டதா?" என்று கேட்ட போது. அதற்கு அவர் "புகார் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு தீர்வு காணப்பட்டுள்ளது" என்று தெரிவித்து, முதலமைச்சர் அவர்களுக்கு தனது நன்றியினைத் தெரிவித்துக் கொண்டார்.

அடுத்ததாக, பெரம்பூலிருந்து மின்தடை குறித்து புகார் தெரிவித்த நபருடனும் தொலைபேசி வாயிலாக முதலமைச்சர் அவர்கள் பேசிய போது, மின்தடையினைச் சீரமைப்பதற்கான பணிகள் தற்போது நடைபெற்று வருவதாக அவர் தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது, கழக பொதுச் செயலாளர் - நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், நாடாளுமன்ற உறுப்பினர் என்.ஆர். இளங்கோ, கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

### சென்னை - நந்தம்பாக்கம் - வர்த்தக மையத்தில் - ஆதிதிராவிடர் - பழங்குடியினர் நலத் துறையின் சார்பில் -இன்று

# ஆதி கலைக்கோல் கலை இலக்கியச் சங்கம் - கண்காட்சி - கருத்தரங்கம்!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பங்கேற்று — கலைஞர்களுக்கு நினைவுப் பரிசுகள் வழங்கி விழாப் பேருரையாற்றுகிறார்!

**சென்னை, டிச. 2–**

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பாக தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக்கழகம் (தாட்கோ) நடத்தும் ஆதி கலைகோல் கலை இலக்கிய சங்கமம், கண்காட்சி மற்றும் கருத்தரங்கம் சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் 01 மற்றும் 02 டிசம்பர் 2024–இல் நடைபெற இருந்த நிகழ்வு நிர்வாக காரணத்தை முன்னிட்டு ஒரு நாள் மட்டும் 02.12.2024 இன்று காலை 09.00 மணிக்கு அமைச்சர் தா.மோ.அன்பரசன் துவக்கி வைத்து உரையாற்றுகிறார்.**

இவ்விழாவில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் விழாவில் பங்கேற்கும் கலைஞர்களுக்கு நினைவுப் பரிசு வழங்கி விழாப் பேருரையாற்றுகிறார்.

இந்நிகழ்ச்சியில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் தலைமை ஏற்கவும், மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் திருமதி என்.கயல்விழி செல்வராஜ் முன்னிலை வகிக்கவும், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டுக் கழக தலைவர் உ. மதிவாணன் சிறப்புரையாற்றுகின்றனர்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின் தொன்மையான கலைகள், பண்பாடு, இலக்கியம், இசை, நடனம் ஆகிய கலை வடிவங்களை பாதுகாக்கவும், காட்சிப் படுத்தவும், ஆதி கலைக்கோல் என்னும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் கலை மற்றும் இலக்கிய சங்கமம் நடைபெறவுள்ளது. இவ்விழாவில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இயக்கங்கள் மற்றும் தலைவர்களின் வரலாற்று தொகுப்புகள் காட்சிப்படுத்தவும். இம்மக்களின் வாழ்க்கை முறையை பிரதிபலிக்கும் வகையில் நாற்பதுக்கும் மேற்பட்ட புகழ்பெற்ற கலைஞர்கள் மற்றும் வல்லுநர்களின் 300க்கும் புகைப்படங்கள், 100க்கும் மேற்பட்ட ஓவியங்கள், மற்றும் சிற்பங்கள் அமைத்து காட்சிப்படுத்தப்படவுள்ளது.

ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின எழுத்தாளர்களின் நூல்கள் மற்றும் அவர்களின் வெளியீடுகள், புத்தகங்கள் அரங்கங்களில் காட்சிப்படுத்தப்பட உள்ளது. இருபதிற்கு மேற்பட்ட பாரம்பரிய கலை வடிவங்கள் மற்றும் கலாச்சார நடைமுறைகளை கற்றல் மூலம் ஒரு சிறந்த அனுபவத்தை அளிக்கும் விதமாக பார்வையாளர்களுக்கு உட்புற மற்றும் திறந்தவெளி பயிற்சி பட்டறைகள் அமைத்து கற்றுத்தரப்படும். மேலும் பாரம்பரிய இசைக் கலைஞர்களின் 800 மேற்பட்ட தொன்மையான இசைக் கருவிகள் மற்றும் நாடகக் கலைஞர்களின் கலை வடிவ ஆடைகள் காட்சிப்படுத்தப் படவுள்ளது. ஒடுக்கப்பட்டோரின் நிகழ்த்துவ கலைகளை மீட்டு உருவாக்கும் செய்யப்பட்ட நையாண்டி மேளம், ஆதிவாசி நடனம், துடுப்பாட்டம் முதலான 30 அதிகமான மறக்கப்பட்ட கலை வடிவங்கள் நிகழ்த்தப்படவுள்ளது. மேலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின் முன்னேற்றத்திற்கு பங்களிக்கும் 11 சமகால எழுத்தாளர்களின் கருத்தரங்கமும், புகழ்பெற்ற கலைஞர்களின் கலைநிகழ்ச்சியும் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அரசு செயலாளர் திருமதி க.லட்சுமி பிரியா வரவேற்புரையாற்றவும், தாட்கோ மேலாண்மை இயக்குநர் க.சு. கந்தசாமி நன்றியுரையாற்றவும் உள்ளனர்.

பொதுமக்கள் அனைவரும் இவ்விழாவில் கலந்து கொள்ளுமாறு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை கேட்டுக கொண்டுள்ளது.